**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 10.09.2025**
**OS. No. 199/2020**
**வழக்கு சாட்சி PW.1–குமார், த/பெ.பழனிசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) என்னுடைய இடத்தில் ஆட்டு பண்ணை கட்டவேண்டும் என்று பிரதிவாதிகள் பிரச்சனை செய்து வருவதால் அவர்கள் எந்த பிரச்சனையும் செய்யக்கூடாது என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மற்ற வாதிகளாக சதாசிவம் மற்றும் குப்புசாமி எனது சகோதரர்கள் ஆவார்கள். பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்து எங்களுக்கு வேண்டும் என்றும், அவர்கள் பிரச்சனை செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளேன், ஒவ்வொரு பிரதிவாதிகளுக்கு எதிராக தனியாக எந்த பரிகாரமும் கேட்கவில்லை. ஒவ்வொரு பிரதிவாதிகளின் தனிப்பட்ட பணி என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை.

2) தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் தற்போது மறந்துவிட்டேன், 50 சென்ட் நிலத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சக்குபந்தி விவரங்கள் சொல்ல இயலுமா என்றால் வடக்கில் பரஞ்ஜோதி நிலம், கிழக்கில் புள்ளைமான் நிலம், மேற்கில் வெங்கடேஷ் நிலம், தெற்கில் சின்னுகவுண்டர் நிலம் ஆகும். மேற்கண்ட சக்குபந்திகள் விவரம் சொல்லி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்து என்ன வகைபாடு கொண்ட நிலம் என்றால் தெரியவில்லை. தாவா சொத்து மேய்ச்சல் புறம்போக்கு நிலம் என்றும், அது அந்த பகுதியிலுள்ள விவசாயிகள் அனைவரும் தங்களது கால்நடைகளை மேய்த்து கொள்வதற்காக வகைபாடு செய்யப்பட்ட நிலம் என்றால் தெரியவில்லை, வழக்கு தாக்கல் செய்த பிறகு தெரிந்து கொண்டேன், நாங்கள் மட்டும் தான் அந்த நிலத்தில் விவசாயம் செய்து வருகிறோம். அதில் எங்களுக்கு தொகுப்பு வீடும் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

3) மேற்கண்ட தொகுப்பு வீடு எந்த திட்டத்தின் கீழ் எங்களுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியவில்லை, என் அண்ணன் சதாசிவத்திற்கு தான் தெரியும். அந்த தொகுப்பு வீடு யார் பெயரில் உள்ளது என்றால் என் அண்ணன் 2ம் வாதி சதாசிவத்தின் மனைவி பெயரில் உள்ளது. இதே கிராமத்தில் எங்கள் குடும்பத்திற்கு பட்டா நிலம் உள்ளது என்றால் எங்கள் குடும்பத்திற்கு இல்லை. என் தாயார் பெயர் என்னவென்றால் அங்கம்மாள் ஆகும். என் தந்தை பெயர் பழனிசாமி ஆகும். என் நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் 100 வருடங்களாக நாங்களும், எங்களுக்கு முன்பு எங்கள் மூதாதையர்களும் அனுபவித்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆதாரங்கள் எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

4) என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தாவா சொத்தில் அமைந்த சிமெண்ட் அட்டை போட்ட வீடு ஒன்றும், இரண்டு தொகுப்பு வீடுகளும் யாருடைய பெயரில் உள்ளது என்றால் தொகுப்பு வீடுகள் என் அண்ணன் மனைவியான வனிதா பெயரிலும், சிமெண்ட் அட்டை போட்ட வீடு என் பெயரிலும் உள்ளது. சிமெண்ட் அட்டை போட்ட வீட்டை தற்போது கான்கிரீட் வீடாக மாற்றி கட்டியுள்ளேன். சிமெண்ட் அட்டை போட்ட வீடு நாங்கள் சொந்தமாக கட்டியதாகும், தொகுப்பு வீடுகள் அரசு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டதாகும், அது என்ன திட்டம் என்று எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1 சொத்து வரி ரசீதில் குறிப்பிட்டுள்ள குப்புசாமி என்பவர் யார் என்றால் எனது சித்தப்பா ஆவார். அவர் இந்த வழக்கின் 1வது வாதி என்றால் சரிதான்.

5) வா.சா.ஆ.1 இரசீதுகளில் 2006 முதல் 2013 வரை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அதில் சர்வே எண்ணோ, சொத்தின் நீள, அகல அளவுகள், விஸ்தீரணங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 சொத்து வரி ரசீதுகளில் குமார் த/பெ.பழனிசாமி என்ற பெயரில் 2018-2019 க்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதிலும் சர்வே எண்ணோ, சொத்தின் நீள, அகல அளவுகள், விஸ்தீரணங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 மின் கட்டண ரசீதுகளில் சர்வே எண்ணோ, சொத்தின் நீள, அகல அளவுகள், விஸ்தீரணங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.4 உத்தரவில் சர்வே எண்ணோ, சொத்தின் நீள, அகல அளவுகள், விஸ்தீரணங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6) மேய்ச்சல் நிலம் என்றால் அதை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றால் அந்த நிலத்திற்கு ஈடாக இருமடங்கு நிலத்தை மேய்ச்சல் நிலமாக கொடுத்துவிட்டு, எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அரசாணைகள் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.4 உத்தரவில் வனிதா க/பெ.சதாசிவம் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியவில்லை. அதே உத்தரவில் வனிதா என்பவர் மூன்று கையொப்பங்கள் தேதி குறிப்பிட்டு போட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எதற்காக கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை.

7) பயனாளிகள் பெயரில் பட்டாவோ, நிலத்திற்கான உரிய ஆவணங்களோ, இருந்தால் தான் அரசால் தொகுப்பு வீடு கட்டி தரப்படும் என்றால் எனக்கு தெரியவில்லை. அதேபோல் தொகுப்பு வீடு கட்ட வேண்டும் என்றால் அந்த பட்டா நிலத்தில் நீளம் அளவுகளுக்குட்பட்டு, வீடு கட்டப்பட்டுள்ளதா என்று அரசு அதிகாரிகள் ஸ்தல ஆய்வு செய்வார்கள் என்றால் சரிதான், அவ்வாறு தாவா சொத்திலுள்ள தொகுப்பு வீடுகளையும் பார்த்துவிட்டு சென்றார்கள். வா.சா.ஆ.4 உத்தரவானது பட்டா நிலத்திற்கு வழங்கப்பட்ட தொகுப்பு வீடு உத்தரவு என்றும், அது தாவா சொத்தில் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தான் மேற்படி தொகுப்பு வீடுகள் உள்ளது என்ற நிரூபிப்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்ய தயாராக உள்ளோமா என்றால் தயாராக உள்ளோம்.

8) வா.சா.ஆ.5 புகைபடமானது தாவா சொத்தில் அமைந்துள்ள வீடு என்பதற்கு அதில் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான், ஆனால் தாவா சொத்தில் தான் உள்ளது. வா.சா.ஆ.6 குடும்ப அட்டையானது மயிலி க/பெ.குப்புசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அவர் யார் என்றால் என் சின்னம்மா ஆவார். மேற்கண்ட மயில் க/பெ.குப்புசாமி என்பவருக்கு எங்கள் ஊரில் பட்டா நிலம் உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.843ல் குப்புசாமி மனைவி மயிலி என்பவர் பெயரும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பட்டா எண்.843ல் கண்ட சொத்தில் தான் மேற்கண்ட மயிலி க/பெ.குப்புசாமி என்பவருக்கு பட்டா நிலம் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை.

9) நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அ ட்டை, குடும்ப அட்டை அனைத்தும் தாவா சொத்து சம்மந்தப்பட்டது என்பதற்கான குறிப்பு எதுவும் அதில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் கால்நடை துறையினரால் மேச்சேரி செம்மறி ஆட்டின திரவ விந்து உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், நாங்கள் அனுபவத்திலுள்ள இடத்தில் அது அமைக்கவில்லை. அந்த நிலங்களில் தான் NLM திட்டத்தின் கீழ் மேச்சேரி இன செம்மறி ஆடுகளின் மரபணு முன்னேற்ற திட்டத்தின் முதல் பகுதியாக இயற்கை இன விருத்தி மூலம் சுமார் 66,000 குட்டிகள் பெறப்பட்டு, சுமார் 40 கோடிக்கு மேல் இத்திட்டம் செயல்படுத்தி வருகிறது என்றால் சரியல்ல, கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது ஆனால் அது பயன்பாட்டில் இல்லை.

10) தாவா சொத்தை எவ்வறேனும் அபகரிக்க வேண்டும் என்பதற்காக பயன்பாட்டில் இல்லை என்று, பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், தருமபுரி, சேலம், கரூர், திருப்பூர் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு தலைமை இடமாக மேற்கண்ட இடம் தான் செயல்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. இத்திட்டமே விவசாயிகளுக்கு பயன்படவும், பொருளாதாரம் மற்றும் வாழ்க்கை தரம் உயர்த்த வேண்டி கொண்டு வந்து முறையாக செயல்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தமிழ்நாடு சட்டபேரவை விதி எண்.110 ன் கீழ் மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவிப்பின் படி, 223 லட்சத்தில் திட்டம் வகுக்கப்பட்டு, நிறைவேற்றி வருகிறது என்றால் சரியல்ல.

11) தாவா சொத்து மேய்ச்சல் நிலம் என்பதால் கால்நடை பயன்பாட்டிற்கு மட்டும் தான் பயன்படுத்தவேண்டும் என்றும், தனிப்பட்ட நபர் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல, பூர்வீகமாக நாங்கள் வசித்து வருகிறோம் எங்களுக்கு வேறு இடம் இல்லை. நாங்கள் பூர்வீகமாக தாவா சொத்தில் வசிப்பதற்கு ஆதரமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேய்ச்சல் நிலம் பொறுத்து வேறு பயன்பாட்டிற்கு அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் எனில் அதற்கு இரட்டிப்பு சமமாக மேய்ச்சல் நிலம் ஒதுக்கப்பட்டு அரசு எடுத்து கொள்ளலாம் என்றால் எனக்கு தெரியவில்லை. மேய்ச்சல் நிலம் பொறுத்து பல தனிப்பட்ட அரசாணைகள் உள்ளது என்றும், தனி நபருக்கு ஒதுக்க இயலாது என்றால் சரியல்ல. என் நிரூபண வாக்குமூலத்தில் தாவா சொத்தை கைபற்றியதாக தான் குறிப்பிட்டுள்ளோம் என்றால்

முன்னோர்கள் காலத்திலிருந்து அங்கு தான் உள்ளோம். என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) தாவா சொத்திலுள்ள எங்கள் வீட்டினை எந்த தேதியில், யார் வந்து அளந்து, வரி விதிப்பு செய்தார்கள் என்றால் எந்த தேதி என்று எனக்கு சரியாக தெரியவில்லை. வருடத்திற்கு ஒரு முறை வந்து அளந்து பார்ப்பார்கள். அரசுக்கு சொந்தமான நிலத்தை எவ்வித அனுமதியும் இல்லாமல் அனுபவித்து வருவதாக சொல்வதே தவறு என்றால் சரியல்ல. வரிவிதிப்பு கொடுத்தால் மட்டும் தாவா சொத்தில் எங்களுக்கு உரிமை வந்ததாக சொல்ல இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்தை தவிர மற்ற இடங்களில் கால்நடை துறையினர் காம்பௌண்ட் சுவர் கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல, எங்கள் அனுபவத்திலுள்ள தாவா சொத்தில் காம்பௌண்ட் சுவர் கட்டுவதற்காக வந்தார்கள் நாங்கள் அதை தடுத்துவிட்டோம். தாவா சொத்தில் கம்பிவேலி அமைக்க முற்பட்டபோது சட்டத்திற்கு புறம்பாக அரசு அலுவலர்களை பணி செய்ய விடாமல் தடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. எவ்வித அடிப்படை ஆதாரமும் இல்லாமல் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் அதிகபட்ச செலவுத்தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.